**டிசம்பர் – 02**

# TNPSC துளிகள்

- சமீபத்தில் இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கிடையேயான 3-வது பேச்சு வார்த்தையானது விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. இது இரு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களால் இணைந்து தலைமை தாங்கப்பட்டது.
  - 4-வது பாதுகாப்பு அமைச்சர்களின் பேச்சுவார்த்தையானது சிங்கப்பூரில் 2019 ஆம் ஆண்டு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- கடத்தலுக்கு எதிரான போராட்டத்தில் திறனுள்ள ஒருங்கிணைப்பை உறுதி செய்தல், எல்லை மேலாண்மையை மேம்படுத்துதல் மற்றும் வணிகங்களை எளிதாக்குதல் ஆகியவற்றிற்காக ஹாட்லைன் (Hot Line) ஒன்றை அமைக்க இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் முடிவெடுத்துள்ளன.
- நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் இந்திய தொழில்துறை கூட்டமைப்பு ஆகியவை இணைந்து நேபாளத்தின் காத்மண்டுக்கு அருகில் உள்ள பக்தாப்பூரில் கட்டுமான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த மூன்று நாள் கண்காட்சியை (ConMac) 2018 ஏற்பாடு செய்திருந்தன.
- முதலாவது கடற்பரப்பு காற்றாலை முதலீட்டு மாநாடானது புதுடெல்லியில் நடைபெற்றது. இதில் ஐரோப்பிய முதலீட்டு வங்கி (European Investment Bank-EIB) மற்றும் பாரத ஸ்டேட் வங்கி (SBI) ஆகியவை இந்தியா முழுவதும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் காற்றாற்றல் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு ஒத்துழைப்பதாக ஒப்புக் கொண்டன.

# தேசியச் செய்திகள்

## 6-வது இந்திய திறன்கள் அறிக்கை

- மற்றும் இந்திய திறன்கள் அறிக்கையின் 6-வது பதிப்பான 2019 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி அதிகபட்ச வேலைவாய்ப்பு திறன்களுடன் ஆந்திரப் பிரதேசமானது முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதனைத் தொடர்ந்து ராஜஸ்தான் மற்றும் ஹரியானா ஆகியவை இடம்பெற்றுள்ளன.
- இந்தியாவில் அதிக வேலைவாய்ப்புத் திறன்களுடன் அதிகப்படியாக வேலைவாய்ப்பு உள்ள மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசமும் ஒன்றாகும்.
- பெண்களின் வேலைவாய்ப்புத் திறன் 46% மற்றும் ஆண்களின் வேலைவாய்ப்புத் திறன் 48% ஆகியவற்றுடன் மொத்த வேலைவாய்ப்புத் திறன் 47% ஆக உயர்ந்துள்ளது.
- இந்த அறிக்கை கீழ்க்காண்பனவற்றின் கூட்டு முயற்சியாகும்.
  - உலகளாவிய திறன் மதிப்பீட்டு நிறுவனமான வீபாக்ஸ் (Wheebox)
  - முன்னணி மனித வள தொழில்நுட்ப நிறுவனமான PeopleStrong மற்றும்
  - இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (Confederation of Indian Industry)
- மேலும் இது,

- ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Programme)
- தொழில்நுட்ப கல்விக்கான அனைத்திந்திய குழுமம் ( All India Council for Technical Education)
- இந்தியப் பல்கலைக்கழகங்கள் கூட்டமைப்பு ( Association of Indian Universities) போன்ற புகழ்மிக்க பங்காளர்களால் ஆதரிக்கப்படுகிறது.

❖ இந்த அறிக்கையானது உத்திரப்பிரதேசத்தின் லக்னோவில் வெளியிடப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## 50-வது நுரையீரல் ஆரோக்கியத்திற்கான ஐக்கிய உலக மாநாடு

❖ 4 நாள்களுக்கு நடைபெறும் நுரையீரல் ஆரோக்கியம் மீதான 50-வது ஒன்றிய சர்வதேச மாநாடானது அடுத்த வருடம் ஐதராபாத்தில் நடைபெறும் என்று காசநோய் மற்றும் நுரையீரல் நோய்க்கு எதிரான சர்வதேச ஒன்றியமானது (The Union) அறிவித்துள்ளது.

❖ இம்மாநாட்டின் கருத்துரு : "அவசர நிலையின் முடிவு : அறிவியல், தலைமைத்துவம், நடவடிக்கை" (Ending the Emergency: Science, Leadership, Action) என்பதாகும்

❖ இது TB மீதான ஐ.நாவின் முதலாவது உயர்மட்ட கூட்டம் மற்றும் 3-வது தொற்றாத நோய்கள் மீதான உயர்மட்ட கூட்டம் ஆகியவற்றிற்குப் பின்னர் நடத்தப்படும்.

# பொருளாதாரச் செய்திகள்

## RTI வரம்பின் கீழ் J&K வங்கி

❖ தலைமை ஊழல் கண்காணிப்பு ஆணையரின் வழிகாட்டுதல்கள் மற்றும் மாநில சட்டசபையின்படி ஜம்மு & காஷ்மீர் வங்கியானது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

❖ இது ஆளுநர் சத்யபால் மாலிக் தலைமையிலான மாநில நிர்வாகக் குழுவினால் (State Administrative Council-SAC) இந்த முடிவானது எடுக்கப்பட்டுள்ளது.

❖ இந்த முடிவின் குறிக்கோளானது சிறந்த ஒன்றுபட்ட ஆட்சி முறையை வலுப்படுத்துவதாகும்.

❖ இந்த முன்மொழிதலின் படி, இனிமேல் ஜம்மு காஷ்மீர் வங்கியானது பொதுத்துறை நிறுவனமாகக் கருதப்படும்.

❖ இது பிற மாநில பொதுத்துறை நிறுவனங்களைப் போல மாநில சட்டசபைக்கு பொறுப்புடையதாகும். மேலும் இது வங்கியின் வருடாந்திர அறிக்கையை மாநில நிதித்துறை வழியாக சட்டமன்றத்தின் முன் சமர்ப்பிக்கும்.

❖ நாட்டில் ஜம்மு & காஷ்மீர் வங்கி மட்டுமே மாநில அரசால் 59.3% பங்குகளை சொந்தமாகக் கொண்டு செயல்படுகின்ற மாநில அரசால் மேம்படுத்தப்படும் ஒரு வங்கியாகும்.

## சிறந்த ஏற்றுமதி குறியீடு

- உத்திரப்பிரதேசத்தின் பாதோஹி மாவட்டத்திற்கு கம்பளம் மற்றும் இதர தரை விரிப்பான் பொருட்கள் பிரிவில் 'சிறந்த ஏற்றுமதி' குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த தகுதி நிலையானது வர்த்தக அமைச்சகத்தின் கீழ் உள்ள வெளிநாட்டு வர்த்தகத்தின் பொது இயக்குநரகத்தால் வழங்கப்பட்டுள்ளது.
- இந்த "சிறந்த ஏற்றுமதி நகரங்கள்" குறியீட்டின் கீழ் இந்நகரத்தின் கம்பள தயாரிப்பாளர்கள் மத்திய அரசிடமிருந்து நிதியுதவியினைப் பெறுவர்.
- இந்த உதவியானது நவீன இயந்திரங்களை வாங்கவும், ஏற்றுமதி கட்டமைப்பை மேம்படுத்தவும், கண்காட்சிகளை ஏற்பாடு செய்யவும் உலகின் பல்வேறு பகுதிகளில் காட்சிப்படுத்தவும் பயன்படும்.
- உத்திரப்பிரதேசத்தின் பாதோஹி மாவட்டமானது கையால் நெய்யப்பட்ட கம்பளங்களுக்கு உலகமெங்கிலும் பிரபலமானதாகும்.
- கங்கை ஆற்றின் அருகில் அமைந்துள்ள இந்த பாதோஹி நகரமானது இந்த குறியீட்டைப் பெற்ற 37-வது நகரமாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## NASI - ஸ்கோபஸ் இளம் விஞ்ஞானிகள் விருது

- இந்திய தேசிய அறிவியல் கழகமானது (National Academy of Sciences India-NASI) புதுடெல்லியில் 2018-ன் ஸ்கோபஸ் இளம் விஞ்ஞானிகள் விருதினை வழங்கியது.
- இந்த ஆண்டு ஐந்து பல்வேறு பிரிவுகளில் புதிய விருதுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- இந்த பிரிவுகள் டிஜிட்டல் இந்தியா, மேக் இன் இந்தியா, சுகாதாரமான இந்தியா மற்றும் சுத்தமான இந்தியா போன்ற தேசிய திட்டங்களுடன் சார்ந்துள்ளன.
- பன்னிரண்டாவது வருடமாக வழங்கப்படும் இந்த NASI ஸ்கோபஸ் இளம் விஞ்ஞானிகள் விருதானது கீழ்க்காண்பனவற்றின் கூட்டிணைவாகும்.
    - எல்சேவியர் மற்றும்
    - இந்திய தேசிய அறிவியல் கழகம்- NASI
- இது இந்தியாவின் சிறந்த மற்றும் அறிவுக்கூர்மையுடைய இளம் விஞ்ஞானிகளைச் சிறப்பிக்க நடத்தப்படுகிறது
- இந்த விருதுகள் திட்டமானது இந்தியாவில் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆதரவளிக்கும் எல்சேவியரின் உலகளாவிய முன்முயற்சியின் ஒரு பகுதியாகும்.

| விருதுகள் | வெற்றியாளர்கள் |
|---|---|
| வேளாண்மை, தாவர அறிவியல் மற்றும் கிராமப்புற மேம்பாடு | Dr. ஜித்தேந்தர் கிரி (தேசிய தாவர ஜீனோம் ஆய்வு நிறுவனம், புதுடெல்லி) |
| உயிரி மருத்துவ ஆய்வு மற்றும் சுகாதாரம் | Dr. மாத்திகா சுப்பா ரெட்டி |

| | |
|---|---|
| | (குழுத்தலைவர் மற்றும் அறிவியலாளர் ஊழியர் - V, CDFD ஐதராபாத்) |
| சுற்றுச்சூழலுக்குகந்த நீடித்த வளர்ச்சி | Dr. விமல் சந்திர ஸ்ரீவஸ்தவா (IIT ரூர்க்கி) |
| பொறியியல் மற்றும் இயற்பியல் அறிவியலில் புத்தாக்கம் | Dr. அஜய் S. காரகோடி (இணை பேராசிரியர், அகமதாபாத் பல்கலைக்கழகம், அகமதாபாத்) |
| அறிவியலில் பெண்கள் | Dr.ஷுமர் கோஷ் (போஸ் நிறுவனம், கல்கத்தா) |

## ரேடியோ அதிர்வெண்ணைப் பயன்படுத்தி என்சைம்கள் உருவாக்கம்

- ACS உயிரிபொருட்கள் அறிவியல் மற்றும் பொறியியல் பத்திரிக்கை வெளியிட்ட ஆய்வின்படி, அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள அறிவியலாளர்கள் ரேடியோ அதிர்வெண் கதிரியக்கத்தினைப் பயன்படுத்தி முதன்முறையாக என்சைம்களை உருவாக்கியுள்ளனர்.
- இது என்சைம்கள் மற்றும் காந்தத் துகள்களை உள்ளடக்கிய சிறப்பான கலவை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.
- ரேடியோ உமிழ்வானது உறிஞ்சப்பட்ட பின்னர் வெப்பமாக மாற்றப்பட்டு என்சைம்களின் செயல்பாடுகளானது 4 மடங்குகளுக்கும் மேலாக அதிகரிக்கின்றன.
- இவ்வாறு ரேடியோ அதிர்வெண்ணை உபயோகித்து உடலில் உள்ள என்சைம்களின் செயல்பாட்டினைக் கட்டுப்படுத்தவும், செல்லின் வளர்சிதை மாற்றத்தினை சரி செய்யவும் முடியும்.

## மாரத்தான்

- ரஷ்யாவின் அரசு விண்வெளி நிறுவனமான ரோஸ்காஸ்மோஸ் ஆனது மாரத்தான் எனும் பெயரிடப்பட்ட செயற்கைக் கோள் அமைப்பினை தொடங்குவதன் மூலம் பொருட்களுக்கான இணையத்தில் திட்டமிட்டுள்ளது.
- இந்த செயற்கைக்கோள் அமைப்பானது 2026-ல் முழுமையாக நிறுவப்படும் ரஷ்யாவின் ஸ்பியர் செயற்கைக்கோள் குழுவின் ஒரு பகுதியாகும்.

# மாநிலச் செய்திகள்

## ஜிரி மேளா

- ஜம்மு மாவட்டத்தின் ஜிரி கிராமத்தில் ஒவ்வொரு வருடமும் ஒருவார கால அளவில் நடைபெறும் ஜிரி மேளாவானது நவம்பர் 30 அன்று நிறைவு பெற்றது.
- இந்த திருவிழாவானது 500 ஆண்டுகளுக்கு முன்னர் நிலப்பிரபுக்களின் அடக்குமுறைத்தனமான கோரிக்கைகளை எதிர்த்துப் போராடி உயிர்த்தியாகம் செய்த விவசாயியான பாபா ஜித்துவின் தியாகத்தை நினைவு கூறுவதற்காகக்

கொண்டாடப்படுகிறது.

- பக்தர்களுக்காக ஜிரி கிராமத்தில் 'சராய்' (தங்கும் விடுதி) கட்டப்படும் என ஆளுநர் அறிவித்துள்ளார்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி சீனியர் ஜார்ஜ் H.W புஷ் மறைவு

- முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் ஹெர்பர்ட் வாக்கர் புஷ் தனது 94-வது வயதில் காலமானார்.



- இவர் 41 வது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார் (1989-1993), மேலும் இவர் 43 வது அமெரிக்க ஜனாதிபதியான ஜூனியர் ஜார்ஜ் W புஷ்ஷின் தந்தையும் ஆவார்.
- ஒரே ஒரு முறை ஜனாதிபதியாக பதவி வகித்த சீனியர் புஷ் 1991 ல் குவைத்தில் இருந்து பாலைவன புயல் நடவடிக்கை (Operation Desert Storm) மூலமாக ஈராக் நாட்டின் படைகளை வெளியேற்றிய 32 நாடுகளைக் கொண்ட கூட்டணியின் பிரபல தலைவர் ஆவார்.
- இவர் 1991 ல் மிக்கேல் கார்பச்சேவுடன் வரலாற்று சிறப்பு மிக்க 'யுக்திசார்ந்த ஆயுதக் குறைப்பு உடன்படிக்கையை' கையெழுத்திட்டு சோவியத் யூனியனுடனான பனிப்போரை முடிவுக்கு கொண்டு வந்தார்.

- - - - - - - - - - - - - - -